# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர் , கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 7788/ 2011 / எம்சி. 8 நாள் : 08.09.2011

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.
-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 09.09.2011 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - செப்டம்பர் 2011

## நிகழ்ச்சி நிரல்



| பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | | 1 |
| வ. எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் | |
| 1 | தேர்தல் பிரிவு - உள்ளாட்சித் தேர்தல் - கோயம்புத்தூர் மாநகராட்சி – 2011 உள்ளாட்சி தேர்தலுக்கு வாக்குச் சாவடிகள் இறுதி செய்யப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக | 2 |



**நன்றியுரை**

அ) **திருக்குறள்**

**எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற் கரிய செயல்**

**(குறள் 489)**

**விளக்கம்**

**கிடைப்பதற்கு உரிய காலம் வாய்க்கும்போது அதைப் பயன்படுத்திக்கொண்டு அப்போதே செயற்கரிய செய்து முடிக்க வேண்டும்.**

**திருவள்ளுவர்**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண்: 1

| | |
|---|---|
| பொருள் - | உள்ளாட்சித் தேர்தல் - கோயம்புத்தூர் மாநகராட்சி – 2011 உள்ளாட்சி தேர்தலுக்கு வாக்குச் சாவடிகள் இறுதி செய்யப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

கோயம்புத்தூர் மாநகராட்சி உள்ளாட்சி தேர்தல் 2011-க்கு மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகள் அனைத்தும் சேர்த்து மொத்த வாக்குச் சாவடிகள் 1101 இறுதி செய்யப்பட்டுள்ளதை மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 13225/10/எம்.சி. 8

**மாநகர மன்ற தீர்மானம் எண் 67 நாள் 09.09.2011**

வாக்குச் சாவடிகள் பட்டியல் ஒப்புதல் அளிக்க தீர்மானிக்கப்பட்டது. மாமன்ற உறுப்பினர்களால் கோரப்பட்ட திருத்தங்களை பரிசீலனை செய்து சாத்தியக்கூறுள்ள திருத்தங்களை மாவட்ட தேர்தல் அலுவலருக்கு பரிந்துரை செய்து அனுப்பிவைக்க தீர்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி